# எல்நெட் டெக்னாலஜீஸ் லிமிடெட்

**பதிவு அலுவலகம்:** டி.எஸ்.140, பிளாக் 2 மற்றும் 9,
ராஜீவ் காந்தி சாலை, தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி: 044-2254 1337 / 1098. தொலை நகல்: 044-2254 1955.
**மின்னஞ்சல்:** elnet@md4.vsnl.net.in; **இணைய தளம்:** www.elnettechnologies.com;
**CIN:L72300TN1990PLC019459**

## அறிவிப்பு

வருடாந்திர அறிக்கை இணைக்கப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட அலுவல்கள் பற்றி பரிசீலிப்பதற்காக எல்நெட் டெக்னாலஜீஸ் லிமிடெட் கம்பெனியின் 25-வது வருடாந்திர பொதுப்பேரவைக் கூட்டம் 15.06.2016, புதன்கிழமையன்று காலை 11.00 மணியளவில் நியூ உட்லண்ட்ஸ் ஓட்டல் பிரைவேட் லிமிடெட், எண்.72-75, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை-600 004 என்ற முகவரியில் நடைபெறும் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. நடைபெற உள்ள 25-வது வருடாந்திர பொதுப் பேரவைக்கூட்டத்தில் டிவிடெண்ட் ஏதேனும் அறிவிக்கப்பட்டால், டிவிடெண்ட் வழங்கும் வகைக்காக கம்பெனியின் பங்குதாரர்கள் பதிவேடும், பங்கு மாற்று புத்தகங்களும் 09.06.2016 வியாழக்கிழமை முதல் 15.06.2016 புதன்கிழமை வரை (இந்த இரு தினங்கள் உள்பட) மூடப்பட்டிருக்கும் என்பது 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 91-வது பிரிவின் கீழ் இதன் மூலம் மேலும் அறிவிக்கப்படுகிறது.

மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் வாக்குப்பதிவை நடத்துவது குறித்து அலுவல்கள் பற்றி பரிசீலிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பது 2013-ம் வருடத்திய கம்பெனிகள் சட்டத்தின் 108-வது பிரிவின் கீழும், 2014-ம் வருடத்திய கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிமுறைகளின் கீழும் இதன் மூலம் பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அறிவிப்பானது அனைத்து பங்குதாரர்களுக்கும் 21.05.2016 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

கட்-ஆப் தேதியான 08.06.2016 அன்றுள்ளபடி பங்குதாரர்களின் வாக்குரிமை கணக்கிடப்படும். மின்னணுவியல் வாக்குப்பதிவு 10.06.2016 அன்று காலை 10 மணியில் இருந்து துவங்கி, 14.06.2016 அன்று மாலை 5.00 மணிக்கு (இந்த இரு தினங்கள் உள்பட) முடிவடைகிறது. மேற்குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு மின்னணுவியல் வாக்குப்பதிவு மூலம் பங்குதாரர்கள் தங்களது வாக்கை பதிவு செய்ய இயலாது. கம்பெனியின் www.elnettechnologies.com என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள வருடாந்திர அறிக்கையில் மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பான தகவல்களை பங்குதாரர்கள் அறிந்து கொள்ளலாம். மின்னணுவியல் வாக்குப்பதிவு பணியை நடத்துவ தற்காக M/s. BP & அசோசியேட்ஸ், கம்பெனி செயலா ளர்கள், சென்னை நிறுவனத்தை கம்பெனியின் இயக்கு னர்கள் குழுவானது ஆய்வாளராக நியமித்துள்ளது.

மின்னணுவியல் வாக்குப்பதிவு தொடர்பாக முறையீடுகள் ஏதேனும் இருப்பின் கம்பெனி செயலாளர் திரு. S.லட்சுமி நரசிம்மன் பொறுப்பேற்று விளக்கம் அளிப்பார். இது குறித்து தொடர்புகொள்ள வேண்டிய விவரங்கள் பின்வருமாறு:- போன்: 044 - 2254 1098 / 2254 1337: விரிவு: 217; இ-மெயில்: elnet@md4.vsnl.net.in. வாக்குப்பதிவு முடிவை தலைவர் அல்லது அவர் இல்லாத நிலையில் ஏதேனும் இயக்குனர் 17.06.2016 அன்று மாலை 5.00 மணிக்குள் அறிவிப்பார் என்பதை பங்குதாரர்கள் தயவுசெய்து அறியவும்.

ஆய்வாளரின் அறிக்கையுடன் அறிவிக்கப்பட்ட வாக்குப்பதிவு முடிவுகள் கம்பெனியின் www.elnettechnologies.com என்ற இணைய தளத்திலும் மேலும் CDSL நிறுவனத்தின் இணைய தளத்திலும் வெளியிடப்படும். மேலும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்படும் பாம்பே ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் லிமிடெட் நிறுவனத்திற்கு இந்த முடிவுகள் தெரிவிக்கப்படும்.

**இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி**

இடம்: சென்னை
தேதி: 25.05.2016

**S.லட்சுமி நரசிம்மன்**
**கம்பெனி செயலாளர்**